கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளைச் சரியாகக் கொடுப்பவர்கள்.
எஸ். எம். பெர்ணாண்டோ
★ ★
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

S. M. FERNANDO
OPTICIANS
Sight Tested Prescriptions Accurately Dispensed
★ ★
580, Hospital Road,
Near Bank of Ceylon
Jaffna.

சுடர்: 6 பிரமோதூத ஞூ மார்கழி ௴ 27 உ வெள்ளிக்கிழமை (11-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 46

# புலிகளின் தடுப்புக் காவலில் சிங்களப் பொலீஸார் 43 பேர்!

## செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் பார்வையிட்டனர்

கைதடி, ஜனவரி 11

இராணுவ நடவடிக்கைகளின் போது 43 சிங்களப் பொலிஸாரை விடுதலைப் புலிகள் கைது செய்திருந்தனர். அவர்கள் தற்போது விடுதலைப் புலிகளின் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொலிஸாரை நேற்றுத் தனித்தனியாகச் சந்தித்து உரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் சிங்களப் பொலிஸார் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட இடத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிய வந்தது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகியுடன் சென்ற செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள், தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸாரை காலை 9 மணியளவில் சென்று பார்வையிட்டனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ் பிரதிநிதி திரு. பிரெட் தலைமையில் சென்ற மூன்று அதிகாரிகளே தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸாரைச் சந்தித்தனர்.

அந்த 43 பொலிஸாரிலும்
(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் ஷெல்; போராளி காயம்!

யாழ்ப்பாணம், ஜன. 11

ஆனையிறவு முகாமிலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு 10.30 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் காயமுற்றார்.

முகாமிலிருந்து பரந்தன் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி சுமார் பத்து ஷெல் குண்டுகள் ஏவி விடப்பட்டன.

எனினும் விடுதலைப் புலிகள் திருப்பித் தாக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. [உ]

## ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒப்பந்தத்தில் வேலை

கொழும்பு, ஜன. 11

விசேட தர ஆசிரியர்களுக்கு நிலவும் பற்றாக்குறையை நீக்க ஓய்வு பெற்ற ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்துவது என்று கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

ஓராண்டுகால ஒப்பந்தத்தில் இவர்கள் பணிபுரிவர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் போதிக்கவே ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். (அ-எ)

## 3 மாத வவுச்சர்கள் செயலகம் வந்தன

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஓய்வூதியர்களுக்குரிய கடந்த அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் 'குமண' கப்பலில் எடுத்து வரப்பட்டு யாழ். செயலகத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இதேவேளை —

இந்தமுறை வவுச்சர்கள் தபால் மூலமே அனுப்பிவைக்கப்படும் எனவும் அவற்றைப் பெறுவதற்காக ஓய்வூதியர்கள் செயலகத்துக்கு வரத் தேவையில்லை என்றும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-5]

## வடக்கே மின்சாரம்; கொழும்பில் பேச்சு

யாழ்ப்பாணம், ஜன. 11

இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய உயர்அதிகாரிகள் இருவர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பு செல்ல இருக்கின்றனர்.

இவர்கள் மின்சார சபையின் தலைமை அதிகாரிகளை சந்தித்து யாழ் குடாநாட்டில் மின்விநியோகத்தை சீராக்குவது சம்பந்தமாகவும், மாங்குளம் மின்கோபுரங்களைத் திருத்துவதற்கு வேண்டிய உபகரணங்களைக் கொண்டுவருவது சம்பந்தமாகவும் பேச்சு நடத்துவார்கள்.

வழமைநிலை திரும்பி - திருத்த வேலைகளை ஆரம்பித்தாலும் - குடாநாட்டிற்கான மின் விநியோகம் சீரடைய இரண்டு மாதங்களுக்குமேல் செல்லும் என எதிர்பார்க்கப்படுவதாக சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [உ-6]

# கலைஞருக்கு எச்சரிக்கை!

## சந்திரசேகர் விடுத்தார்

புதுடில்லி, ஜன. 11

மத்திய அரசுடன் மோதிக் கொள்வதைத் தமிழக முதலமைச்சர் கருணாநிதி தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று பிரதமர் சந்திரசேகர் நேற்று எச்சரிக்கை செய்தார்.

ராஜ்யசபாவில் விடுதலைப் புலிகளின் தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து தி. மு. க. மற்றும் அ. தி. மு. க. கொண்டு வந்த முன்னறிவிப்பு இல்லாத விவாதத்திற்கு பதிலளித்துப் பேசுகையிலேயே இந்த எச்சரிக்கையை அவர் விடுத்தார்.

திரு. சந்திரசேகர் மேலும் சொன்னதாவது:-

மாநில அரசைக் கலைப்பது மத்திய அரசின் நோக்கமல்ல. அதேசமயம் மத்திய அரசுக்கு எதிராக தொடர்ந்து மோதல் நிலையை முதலமைச்சர் உருவாக்கக்கூடாது.

### மலிவு விலையில் ஏ.கே. 47

தற்போது ஏ. கே. 47 ரக துப்பாக்கிகளுக்கும், விடுதலைப் புலிகளின் நடமாட்டத்
[4 ஆம் பக்கம் பார்க்க]

## அதிகாரிகளை மாற்ற கோருகிறார் சிதம்பரம்

சென்னை, ஜன. 11

சட்டம் ஒழுங்கு பற்றி பொய்த் தகவல்களைக் கூறி வரும் தமிழக தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர் மற்றும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆகியோரை உடனே இடமாற்றம் செய்யும்படி இந்திரா காங்கிரஸ் எம். பியும் முன்னாள் உள்துறை இணை அமைச்சருமான ப. சிதம்பரம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில்-

''விடுதலைப் புலிகளைக் கைது செய்திருப்பதாக முதலமைச்சர் கருணாநிதி கூறுவதை எவரும் நம்பத் தயாரில்லை'' என்று தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் 200 மாருதி வான்கள் உள்ளன என்றும் அவர் கூறியுள்ளார். [உ-எ]

## வவுனியாவில் மீண்டும் படையினர் கெடுபிடி

யாழ்ப்பாணம், ஜன. 11

வவுனியாவில் தளர்ந்திருந்த படையினரின் கெடுபிடிகள் மீண்டும் தலைதூக்கி இருப்பதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா சர்வோதயத்துக்கு முன்னால் உள்ள படையினரின் 'சென்றி'யிலேயே சோதனைக் கெடுபிடிகள் மோசமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சில பொருள்கள் இருப்பது தெரியவந்தால் அடி, உதை கிடைப்பதோடு, அவை பறிமுதலும் செய்யப்படுகின்றனவாம். (ஓ-6)

## தபால்கள் வந்தன; இன்று தரம் பிரிப்பு

பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ள ''குமண'' கப்பலில் யாழ். மாவட்டத்துக்கு 243 தபாற்பொதிகள் வந்துள்ளன.

இவற்றை எடுத்துவர யாழ். பிரதம தபாலக ஊழியர்கள் நேற்று பருத்தித்துறைக்குச் சென்றிருந்தனர். நேற்று மாலையே தபாற்பொதிகள் பிரதம தபாலகத்துக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்டது.

தபாற்பொதிகளைத் தரம் பிரிக்கும் வேலைகள் இன்று ஆரம்பிக்கப்படும் என்றும்—

தபால் விநியோகம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகும் என்றும் மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. என். சடாட்சரநாதன் தெரிவித்தார். [உ-6]

## காலாவதியான மருந்து கப்பலில் வந்தது!

யாழ்ப்பாணம், ஜன. 11

கப்பல் மூலம் யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ள மருந்து வகைகளில் ''அம்பிகுளொஸ்'' (Ampiclox - 300 vails) எனும் ''அன்ரிபயற்றிக்'' மருந்து காலாவதியாகி விட்டதாக அறியவந்துள்ளது.

பாவிக்கத் தகுந்த காலம் 1990 அக்டோபர் மாதம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

வடக்குக்கு மருந்து அனுப்புவதில் எத்தனையோ கெடுபிடிகள். அனுப்பும் மருந்திலும் இப்படியா உதாசீனம் செய்வது என்று சம்பந்தப்பட்டவர்கள் கவலை தெரிவித்தனர். (ஓ-6)

## முக்கிய மருந்துவகை கொண்டு வரத் தடை

### நாய்க்கொல்லி வந்துள்ளது

யாழ்ப்பாணம், ஜன. 11

அனேக நோய்களுக்குப் பாவிக்கப்படும் நுண்கிருமிக் கொல்லி (''அன்ரியயற்றிக்ஸ்'') மருந்து வகைகளை வடபகுதிக்குக் கொண்டு வர கூட்டுப் படைத் தலைமையகம் உத்தியோக பூர்வமாகத் தடை விதித்துள்ளது.

''சேலைன்'', அது சம்பந்தப்பட்ட உபகரணங்கள், மற்றும் காயங்களுக்[illegible]டும் துணிகள் (டிரெஸிங்) ஆகியவற்றைக் கொண்டு வரவும் கூட்டுப் படை தடை விதித்துள்ளது.

இத்தடை குறித்து சுகாதார அமைச்சுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை பிராந்திய சுகாதாரப் பகுதிக்கு, விசர்நாய்க் கடி தடுப்பு மருந்தில் [illegible] இ.) ஐயாயிரம் மில்லி லீற்றர் [illegible]

# தாக்குதல் இடை நிறுத்தம் மேலும் 7 நாட்கள் நீடிப்பு!

## இன்று உத்தியோகபூர்வ அறிவிப்பு

கொழும்பு, ஜன. 11

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை இடைநிறுத்தி ஸ்ரீலங்கா அரசாங்கம் விடுத்திருந்த தாக்குதல் நிறுத்த அறிவிப்பு மேலும் ஒரு வார காலத்துக்கு நீடிக்கப்படும்.

இதற்கான உத்தியோக பூர்வ அறிவிப்பு ஸ்ரீலங்கா அரசினால் இன்று காலை வெளியிடப்படும். நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் வெளியான செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக விடுத்த காலவரையறையற்ற யுத்த நிறுத்த அறிவிப்புக்குப் பதிலாக ஸ்ரீலங்கா அரசு ஒருவார காலத்துக்கு தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்துவதாக அறிவிப்பு விடுத்திருந்ததும்—

இந்த ஒரு வார கால எல்லை இன்று அதிகாலையுடன் முடிவடைந்ததும் தெரிந்தவையே.

அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து, ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று கட்சித் தலைவர்களின் மாநாட்டை கூட்டி அதில் ஆராய்ந்தார்.

நேற்றிரவு இக்கூட்டம் முடிவுற்ற பின்னர் நள்ளிரவு வரை அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றதாக இன்று அதிகாலையில் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இக்கூட்டத்தின் பின்னர் அரச படைகளின் தாக்குதல் நடவடிக்கை நிறுத்தத்தை இன்று அதிகாலை முதல் மேலும் ஒருவார காலத்துக்கு நீடிப்பது என்று முடிவானதாகவும்-

அதுபற்றிய உத்தியோக பூர்வ அறிவிப்பு இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஏஜென்ஸி செய்திகள் மேலும் தெரிவித்தன.

## அஸாம் தீவிரவாதிகள் இருவர் பிடிபட்டனர்!

புதுடில்லி, ஜன. 11

அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த தீவிரவாதிகள் இருவர் இந்திய ஆஸ்பத்திரி ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டிருப்பதாகவும்-

அவர்களிடமிருந்து பெறப்பட்ட பல திடுக்கிடும் தகவல்கள் கவலையைத் தருவதாக இருப்பதாகவும் இந்திய பிரதமர் சந்திரசேகர் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் நடமாடுவதாகக் கூறப்படுவது பற்றி நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். [உ]

## எரிபொருள் தட்டுப்பாடு

மட்டக்களப்பு மாவட்டத்திலும் எரிபொருளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆளுக்கு இரண்டு லீற்றர் வீதமே எரிபொருள் வழங்கப்படுகிறது. [ஓ-5]

## கண்காணிக்க தனிக்குழு ஒன்றை அரசு தன்னிச்சையாக நியமிக்கும்?

யாழ்ப்பாணம், ஜன. 11

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரசு பிரகடனப்படுத்தியிருக்கும் தாக்குதல் நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கான தனியான குழு ஒன்றை ஸ்ரீலங்கா அரசு தன்னிச்சையாக நியமிக்கக் கூடும்.

அரசின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டதாக கொழும்பில் ஏஜென்ஸிச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

அனேகமாக தாக்குதல் நிறுத்தம் நீடிக்கப்பட்டிருப்பதான அறிவிப்பு இன்று வெளியாகும் போது கண்காணிப்புக் குழு பற்றிய அறிவிப்பும் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

## முச்சந்தி முரளி



அப்ப இனி, கிழமைக்குக் கிழமை அறிவிச்சுக்கொண்டேயிருப்பார் போலை......!

## 14 கட்சிகளுடன் பிரேமா நேற்று பேச்சு

கொழும்பு, ஜன. 11

விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் குறித்தும் அரசின் தாக்குதல் நிறுத்த நீடிப்பு குறித்தும் நேற்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தினார்.

நேற்றைய பேச்சுக்களில் பதினான்கு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நேற்றிரவு மிக நீண்ட நேரம் பேச்சுக்கள் இடம்பெற்றன.

கலந்து கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகளில் அனேகமானோர், அரசு பிரகடனப்படுத்தியுள்ள தாக்குதல் நிறுத்த அறிவிப்பை நீடிக்குமாறு ஜனாதிபதியை வலியுறுத்தியதாக இன்று அதிகாலையில் வெளியான ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. [உ-ஓ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

க. பொ. த உயர்தரம் B. Com மாணவர்களுக்கான நியமக்கிரயவியல் (பா. பாலச்சந்திரன்) கணக்கியற் கோட்பாடுகள் [நல்லையா குமரகுருபரன்] விபரணப் புள்ளி விபரவியல் (செல்லையா இளங்குமரன்) மற்றும் கணக்கியல் நூல்கள் விற்பனைக்கு உண்டு. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (15485)

## மணமகள் தேவை

யாழ். இந்து 33 வயது, உயரம் 6 அடி கொண்ட குற்றமற்ற சர்வதேச வியாபாரம் செய்யும் படித்த மணமகனுக்கு மகம் நட்சத்திரம்; படித்த வடிவான மணமகள் தேவை சீதனம் கவனிக்கப்படமாட்டாது. தொடர்பு:- A B C D E விளாகப் பொருத்துனர் 328, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (15487)

## அச்சுக்கூடம்

அச்சுக்கூடப் பாவனைக்குரிய பேப்பர் கட்டிங் மெஷின் உடன் தேவை. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். 342, பருத்தித்துறை வீதி, சட்டநாதர் கோவிலடி, யாழ்ப்பாணம் [C/5635]

## இலவசம்

ஆண்டு 5ஆம் வகுப்பும் அதற்கு கீழ் வகுப்புகளும் இலவசமாக கற்பிக்கப்படுகின்றன. அனைத்து மாணவர்களும் உடன் தொடர்பு கொள்க:- இடம் கல்வியங்காடு, ஸ்ரார்பிளுப்பில் அக்கடமி, 3 ஆம் கட்டை. [15210]

## புத்தகங்கள்

1991ல் நடைபெறவுள்ள O/L விசேட பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதற்காக 1990 டிசம்பரில் நடைபெற்ற O/L பரீட்சை வினாத்தாள் தொகுதி விற்பனையாகிறது. தொகையாகவாங்குவோர்க்கு விலைக்கழிவு உண்டு விபரங்கட்கு எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரியூட், இருபாலைச்சந்தி. [15396]

## அச்சகம் விற்பனைக்கு

சைனா பிளேடின் மெஷினுடன் அச்சகம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 171, C/O உதயன் யாழ்ப்பாணம் (15484)

## FUDO - TYPEWRITERS

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் FUDO 39/17 மின்சாரநிலைய வீதி 3-ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். கிளை: பிரதான வீதி, மானிப்பாய். [இ-5585]

## தனிப்பட்ட பிரத்தியேக வகுப்புகள்

G. C E. A/L பௌதிகவியல், தூய கணிதம் பிரயோக கணிதம் தனிப்பட்ட முறையில் பல வருடம் அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஆழமாக கற்பிக்கப்படும் விசேஷமாக கொடுக்கப்படுகிறது. விபரங்களுக்கு பாவா மாஸ்டர் B.Sc [Cey] 17/1 பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (15211)

# சாவகச்சேரி ப.நோ.கூ.ச. தையல் நிலையம்

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் தையல் பயிற்சி நிலையம் ஒன்றையும், தையல் நிலையம் ஒன்றையும் ஆரம்பித்துள்ளது.

பொதுமக்களின் நன்மை கருதி சில கிளை நிலையங்களில் தையல் நிலையங்களை நடத்தவும் இயக்குநர் சபை முன்வந்திருப்பதாக தலைவர் திரு. க. அருந்தவபாலன் தெரிவித்தார்.

மேலும், சங்கம் தும்புத் தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் முயற்சி மேற்கொண்டுள்ளது. (இ-31)

# இளம் பெண் தற்கொலை

மிளகாய்க் கன்றுக்கு தண்ணீர் ஊற்றாததற்கு தாயார் கண்டித்ததால் மனமுடைந்த இளம் பெண் ஒருவர் (17 வயது) தமது நஞ்சு மருந்து அருந்தி தற்கொலை செய்து கொண்டார். எழுதுமட்டுவாள் ஒட்டுவெளியில் இச்சம்பவம் இடம்பெற்றது. (இ-117)

# விக்னா டியூசன் சென்ரர்

52 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

பிரிவு 2

**92** Sat., Sun. CLASSES

ஆரம்பம்: 12-01-91 (2. 15)

| | |
|---|---|
| பொருளியல் | - திரு. கலாகரன் |
| வர்த்தகவியல் | - பிரபல விரிவுரையாளர் |
| கணக்கியல் | - திரு வன்னியசிங்கம் |
| அளவையியல் | - திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் | - திரு குழந்தை |
| இந்துநாகரிகம் / இந்துசமயம் | - திரு காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | - திரு குணராஜா |
| அரசியல் | - திரு. சிலன் |
| வரலாறு | - திருமதி குணராஜா |

மு. குறிப்பு:

i கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகிறது

ii அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும். [சி/5609]

---

1989 O/L பரீட்சையில் தவறிய மாணவருக்கு ஓர் அரிய வாய்ப்பு!

# O/L 1991 விஷேட பரீட்சைக்கான

## பகல் முழுநேர வகுப்பு

(காலை 8.00 - பி.ப 1.00)

தை 07 இல் ஆரம்பமாகி நடைபெறுகிறது.

இவ் வகுப்பு மாணவர்களும் கணித ஆசிரியர் திரு. வரதராஜனின் விசேஷ கணித (மீட்டல்) வகுப்பில் இலவசமாக கல்வி கற்க முடியும்.

[15486]

---

# பாரதி கல்வி நிலையம்

(சித்தன்கேணி)

## A/L 90

★ புவியியல் - சண்

வினா - விடை வகுப்பு

ஆரம்பம் - 12 - 1 - 91 3 மணி

## A/L 91, 92 வகுப்புக்களும் ஆரம்பமாகிவிட்டன.

## A/L 91

★ பொருளியல் - குமாரவேல்

பகுதி II (சென்மதி நிலுவை)

ஆரம்பம் - 15 - 1 - 91

Spoken English With Grammar By Britto

சனி/ஞாயிறு நடைபெறுகின்றன. [சி/5637]

---

# 1ஆம் ஆண்டின் நினைவலைகள்



மண்ணில்: 22 - 09 - 1924

விண்ணில்: 11 - 01 - 1990

## உயர்திரு. சவிரிமுத்து அலோசியஸ்

அன்பின் அணையா ஜோதியே
ஆசையுடன் எமை எல்லாம்
நல்வழியில் நடத்திச் சென்ற (தந்தையே)
பின்னாது! முழங்காது! சொல்லாது
எம்மை விட்டு பிரிந்தாயோ (எம்தலைவா)

11ஆம் திகதி காலை 6-15மணியளவில் யாழ் மரியன்னை பேராலயத்தில் இவரது ஆத்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(15478)

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15 - 10 - 1913

மறைவு: 03 - 01 - 1989

திதி: 11 - 01 - 1991

## மாரிமுத்து குமாரசாமி

(முன்னாள் கிராம. விதானையாரும் பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளரும் - புங்குடுதீவு)

அறிவுச்சுடராய், மாறாத புன்சிரிப்புடன், ஆன்றோர் சபைதனில் தலைமை தாங்கி, ஆலவிருட்சம் போல் நின்று எம்மைக் காத்த தெய்வமே! உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

குடும்பத்தினர்.

(15467)

---

DHL WORLDWIDE EXPRESS

வெளிநாட்டுக் கடிதங்கள் உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நாடுகளிலேயே தபாலில் சேர்க்கப்படும்.

குறைந்த கட்டணம் ரூபா 20/00

விபரங்களுக்கு,

**Cosmos Marketing Services**

337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(சி/5618)

---

யாழ்ப்பாண மாவட்டத் தேசிய பாடசாலைகள்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி

# ஆண்டு 6 அனுமதி பெறுவதற்கான பிரவேசப் பரீட்சை - 1991

01. இப்பரீட்சை பெப்ரவரி மாதத்தில் நடைபெறும். பரீட்சை நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.
02. தற்போது ஆண்டு 5 இல் கல்வி கற்கும் மாணவர்களும், 01 - 02 - 1980 ஆம் திகதிக்கு பின்னர் பிறந்தவர்களும் மட்டுமே இப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர்களாவர்.
03. பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை பிரவேசம் பெற விரும்பும் கல்லூரி அலுவலகத்தில் கட்டணமாக ரூபா முப்பது [30/-] செலுத்தி நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
04. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் பிரவேசம் பெற விரும்பும் கல்லூரியில் நேரில் 30 - 01 - 1991 புதன்கிழமைக்கு முன்னதாக கையளிக்கப்படல் வேண்டும். 30 - 01 - 1991 ஆம் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
05. கல்லூரியால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப்படிவங்கள் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
06. கிடைக்கப் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பிரவேசப் பத்திரங்களை கல்லூரியில் நேரில் பெற்றுக்கொள்வதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

| | |
|---|---|
| செல்வி இ. இராஜரத்தினம், அதிபர் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம். | க. சி. குகதாசன், அதிபர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம். |

(சி/5636)

---

# கலை வர்த்தகக் கல்லூரி (C. C. A.)

[இலங்கிடன் சந்தி அருகாமை]

**92** பிரிவு 2 SAT, SUN CLASSES

ஆரம்பம்: 13 - 01 - 1991 8.00 a.m.

**91** Day Classes

ஆரம்பம்: 16 - 01 - 1991 8.00 a.m.

[சி-5629]

---

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி கருணாதேவி துரைசிங்கம்

கருணையே உருவான கருணாதேவியே
கிறிஸ்தவ சேவைக்கென பிறந்த பெண்மணியே
ஆசிரியர் சேவைக்காய் வாழ்வை அர்ப்பணித்தவளே
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் தான் கொண்டதேனோ?

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி,
அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்.

[15491]

---

# மரண அறிவித்தல்

## எலியாஸ் (தம்பிராசா)

மாரீசன்கூடலைச் சேர்ந்த எலியாஸ் (தம்பிராசா) அவர்கள் 10 - 01 - 91 வியாழன் அன்று காலமாகி விட்டார்.

இவர் சிசிலியா மாணிக்கத்தின் அன்புக்கணவரும், மரியமலர் [பூபதி] கயித்தாம்பிள்ளை [பிரதேச சபை மல்லாகம்], மரியதாஸ் [ஓமான்] ஆகியோரின் அன்புத் தந்தையும், ச. செ. இரத்தினம், மேரிதிரேசா, மரியறோஸ் ஆகியோரின் அருமை மாமனாரும். ஜூட் அமல்தாஸ் (புனித சவேரியார் குருமடம் யாழ்ப்பாணம்), ஜெசி, றொட்னி, ரெம்சி, ஜொய்ஸ் சகுந்தலா, றேகன், ஜெகன், றங்கன், மொறின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 11 - 1 - 91 வெள்ளி பிற்பகல் 2. 30 மணியளவில் மாரீசன்கூடல் புனிததகயித்தார் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எ. கயித்தாம்பிள்ளை.

மாரீசன்கூடல், இளவாலை.

(15488)

---

# டிப்ளோமா மனைப் பொருளியல்

# DIPLOMA IN HOME ECONOMICS

| | |
|---|---|
| ✯ கேக் ஐசிங் | |
| ✯ சமையற்கலை: | [கீழைத்தேய, மேலைத்தேய உணவு வகைகள் சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், புடிங் வகைகள் தயாரித்தல்] |
| ✯ தையற் கலை: | [குழந்தைகள், சிறுவர்கள், மகளிருக்கான உடைகள் தயாரித்தல், பூவேலை போடுதல்] |
| ✯ கூந்தல் அலங்காரம்: | கொண்டைகள் போடுதல், விக் தயாரித்தல், மணப்பெண் அலங்காரம்] |
| ✯ கைவேலை: | [மக்றமி. நூல் வேலை, கம்பளி நூல் வேலை, பஞ்சில் பொம்மைகள் செய்தல். வாழைநார் வேலைப்பாடுகள்] |
| ✯ பூவேலை: | [கடதாசியினாலும், துணிகளினாலும் மலர்களை உருவாக்குதல்] |
| ✯ வர்ணம் தீட்டுதல்: | [துணிகளிலும், கண்ணாடிகளிலும், இசைத்தட்டுக்களிலும்] |
| ✯ சித்திரக் கலை: | [சித்திரங்கள், வரைதல், கோலங்கள் போடுதல்] |

- பயிற்சிக் காலம் 6 மாதங்கள்
- பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட Diploma in Home Economics தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
- வகுப்புகள் திங்கள், புதன் ஆகிய தினங்களில் காலை 9 00 மணி முதல் பி ப. 1.00 மணி வரை நடைபெறும்.

**வகுப்புக்கள் ஆரம்பம்: 16-01-1991**

- தொழில் புரியும் பெண்கள் மற்றும் இல்லத்தரசிகளின் வசதி கருதி ஞாயிற்றுக்கிழமை வகுப்புக்களும் 20 - 01 - 1991 முதல் ஆரம்பமாகின்றன.

விபரங்கட்கு:

★ கலாலயா ★

பதிவு இல. 16020

கப்டன் நரேன் வீதி,

(யாழ். ஆஸ்பத்திரியின் பின்புறம்)

யாழ். நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கடமையும் உரிமையும்

ஆசிரியர்கள் லீவு எடுக்கும் விவகாரத்தில் ஆசிரியர் சங்கச் செயலாளருக்கும் கல்விப் பணிப்பாளருக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில், யுத்த நிலைமை காரணமாக கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக பாடசாலைகள் ஒழுங்காக நடக்கவில்லை. அதனால் இடைக்காலப் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு எதிர்வரும் பெப்ரவரியிலேயே மாணவருக்குரிய வகுப்பேற்றப் பரீட்சை நடக்கப்போகிறது.

அதுவரைக்கும் ஆசிரியர்கள் லீவு எடுக்கக் கூடாது. அவ்வாறு லீவு எடுத்தால் அது சம்பளமில்லாத லீவாகக் கருதப்படும் என்று கல்விப் பணிப்பாளர் அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பைக் கேட்டதும் பிரதான ஆசிரியர் தொழிற்சங்கமான தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளருக்குப் 'பொத்' தெனக் கோபம் வந்துவிட்டது. ஒரு தொழிற்சங்கவாதி என்ற நிலையில் நின்று கொண்டு, அந்தக் கண்ணோடு மட்டுமே நோக்கி அவர் கல்விப் பணிப்பாளரைச் சாடியிருக்கிறார்; சீறிப் பாய்ந்திருக்கிறார்.

ஸ்தாபனக் கோவைக்கு முரணாக ஆசிரியர்களுக்கு சம்பளமற்ற லீவு வழங்கினால் சங்கம் அதனை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்காது - என்று அவர் போர்க் கொடி பிடிக்கிறார்.

ஆசிரியர் நியமனம் பெறும் ஒவ்வொருவரும் மாணவர்களுக்குக் கல்விச் செல்வத்தை ஊட்டும் மகத்தான பணிக்குத் தம்மை அர்ப்பணிக்க வேண்டியவர்கள். எதிர்காலச் சந்ததியினரான மாணவர் நலன் நாடியே அவர்களின் சேவை அமைய வேண்டும். ஆசிரியர் பணி ஒரு வெறும் உத்தியோகம் அல்ல; ஒரு சோற்றுப் பிழைப்பும் அல்ல. ஒரு மனிதனை பூரணமானவன் ஆக்கும் கல்வியறிவு ஊட்டும் புனிதமான சேவை.

தமிழர்கள் சிறுபான்மையினராக இருந்த போதிலும், உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கவும், அதனால் உண்டாகும் கஷ்டங்களை எதிர்கொள்ளவும் பெரும் வலிமையைத் தந்து கொண்டிருப்பது கல்விச் செல்வம் தான். அதற்காகச் சென்ற பல சந்ததிகளைச் சேர்ந்த ஆசிரிய திலகங்களுக்குத் தமிழர் சமுதாயம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது.

அதே அர்ப்பணிப்பும் சேவை உணர்வும் இன்றைய ஆசிரியர்களுக்கும் அவசியம்; கட்டாயம். அவற்றுக்கும் மேலாக தியாக உணர்வும் தேவை. தங்கள் சொந்தத் தேவைகள், உரிமைகளைப் பெறுவதில் மட்டுமே அக்கறை காட்டாது, சமுகாயத்தின் கல்வி வளர்ச்சியிலும் உணர்வு பூர்வமாகப் பணிபுரியும் மனப்பக்குவம் தேவை.

இது போராட்டச் சூழல் கொண்ட காலம். இயல்பு நிலை உள்ள காலங்களைப் போன்று சகல வசதி வாய்ப்புகளும் இப்போதும் சரிவரக் கிடைக்க வேண்டும் என்று எவருமே எதிர்பார்க்கக் கூடாது. இக்கட்டான நிலைக்கு ஏற்ப 'எழுந்து' நிற்கக்கூடிய மனப்பக்குவம் சகலருக்கும் வேண்டும்.

ஸ்தாபனக் கோவைகள், தொழிற்சங்க உரிமைகள் எல்லாம் அச்சொட்டாக அமுலாக வேண்டும் என்று எவரும் எதிர்பார்க்கக்கூடாது.

இன்றைய சூழ்நிலையில் மாணவர்கள் இழந்த கல்வியை மீட்டுக் கொடுப்பது ஆசிரியர்களின் கடமை. அந்தக் கடமையைச் செய்யாது இயல்பு காலத்து உரிமைகளுக்கு அடம்பிடிப்பதும், போர்க்கொடி உயர்த்துவதும் ஆகாது. கடமையைச் சரிவரச் செய்பவனே உரிமைகளைக் கேட்கவும் அனுபவிக்கவும் அருகதை உடையவன்.

ஆசிரியர்கள் இதனை உணர்ந்து தமது சேவையை எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்க வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறோம்.

## சிங்கக்கொடி ஏற்றுமாறு கெடுபிடி

நெடுந்தீவு, ஜன. 11

நெடுந்தீவு - அனலைதீவு படகுகளின் படகு மீலங்காரின் சிங்கக் கொடியுடனேயே வரவேண்டும் என நயினாதீவு கடற்படை அதிகாரிகள் எச்சரித்துள்ளனராம். (இ-111)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ் கே. கே. எஸ். வீதியில் உள்ள செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையத்தின் 9 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9. 00 மணிக்கு இல்லர் மண்டபத்தில் நடைபெறுகிறது.

சைவபவத்துக்கு திரு. ஆ. ஜோ. பாலநாயகம் தலைமை வகிப்பார். (இ)

# யாழ். சித்த வைத்தியசாலைகளுக்கு கொழும்பிலிருந்து மருந்து இல்லை

### ஒரு வருட காலமாக இந்த அவல நிலை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் சித்த வைத்தியசாலைகளுக்கு, கடந்த ஆண்டில் கொழும்பு ஆயுள்வேதக் கூட்டுத்தாபனத்திலிருந்து மருந்து வகை எதுவும் அனுப்பி வைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் 30 சித்த வைத்தியசாலைகள் உள்ளன.

இவை ஒவ்வொன்றுக்கும் வருடம் ஒன்றுக்கு 30 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரை மருந்து வகைகளுக்காக ஒதுக்கப்படுவதுண்டு.

இதில் மூன்றில் இரண்டு பங்கு மருந்தை கொழும்பு ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் வழங்கும். மீதி மருந்து யாழ். மாவட்டத்தில் தனியாரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட வேண்டும்.

ஆனால் கடந்த 1990 ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்தே கொழும்பு ஆயுள்வேதக் கூட்டுத்தாபனம் எந்த ஒரு மருந்தையும் அனுப்பவில்லை.

இதனால் தனியே யாழ்ப்பாணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மருந்து வகைகளை மட்டும் நம்பியே சித்த வைத்தியசாலைகள் செயற்பட்டு வருகின்றன.

இது பற்றி சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

கடந்த 6 மாத காலமாக நிலவிய சீரற்ற நிலையே மருந்து வராமைக்குக் காரணம் என்றும், தற்போது மேற்படி நிதியை மாகாண சபையில் இருந்து பெற்று உள்ளூரிலேயே போதிய மருந்தைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது ஆங்கில மருந்து வகைகளுக்கு ஏற்பட்டுள்ள கட்டுப்பாடு காரணமாக சித்த வைத்தியத்தை நாடுவோர் எண்ணிக்கை அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-6)

## பாதிக்கப்பட்டோருக்கான சத்தியக் கடதாசி இலவசம்

யாழ்ப்பாணம், ஜன. 11

கடந்த ஆறு மாத காலம் போரில், இராணுவத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சத்தியக் கடதாசிகள் இலவசமாகத் தயாரித்துக் கொடுக்கப்படுகின்றன.

மனித உரிமைகள் இல்லம் இந்தப் பணியை மீண்டும் தொடங்கியுள்ளது. இல்லத்தின் புதிய அலுவலகம் இப்போது சோமசுந்தரம் வீதியில் உள்ள 37 ஆம் இலக்கத்தில் இயங்குகிறது.

மூன்றாம் குறுக்குத் தெருவில் நீண்டகாலமாக இயங்கிய மனித உரிமைகள் இல்லத்தின் அலுவலகம் விமானக் குண்டு வீச்சினால் முற்றாகச் சேதமடைந்தது தெரிந்ததே.

புதிய அலுவலகத்தில், இல்லத்தின் வழமையான பணிகள் இப்போது நடைபெற்று வருவதாக அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். [அ]

## அளவைகள் - நிறுவைகள் அலுவலகம் இடம் மாற்றம்

நவாலி, ஜன. 11

யாழ். அளவைகள் - நிறுவைகள் திணைக்களம் கடந்த செவ்வாய் முதல் யாழ். செயலகத்தில் இயங்குகிறது.

யாழ். பழைய கச்சேரிக் கட்டடத்தில் இயங்கி வந்த இந்த அலுவலகம் அண்மையில் இடம்பெற்ற வான் தாக்குதல்களின் போது சேதமடைந்தது.

இதனால் சிறிது காலம் அங்கு இயங்காமல் வெளிக்கள வேலைகளை மாத்திரம் அது செய்து வந்தது. தற்போது யாழ். செயலகத்திலுள்ள பாஸ்போர்ட் கிளை அலுவலகத்துக்கு இது இடமாற்றம் செய்யப்பட்டு அலுவல்கள் நடைபெறுகின்றன.

இதேவேளை இங்கு இயங்கி வந்த பாஸ்போர்ட் அலுவலகம் தற்பொழுது செயலக மேல்மாடியிலுள்ள பொறியியலாளர் அலுவலகத்தில் இயங்குகிறது. (இ-100)

## பொங்கலன்று படகுச்சேவை இராது

நெடுந்தீவு, ஜன. 11

பொங்கல் தினமான 14 ஆம் திகதி திங்கட்கிழமை நெடுந்தீவு குறிகாட்டுவான் படகுச்சேவை நடைபெறாது.

அதற்குப்பதிலாக 16 ஆம் திகதி புதன்கிழமை விசேஷ சேவை ஒன்று இடம்பெறும் என அறிவிக்கப்படுகின்றது.

திங்கள், வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே வழமையான சேவை உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. (இ-111)

## அரிக்கன் லாம்புடன் பிரசவத் தாய்மார்

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலைக்கு குழந்தைப் பிரசவத்திற்குச் செல்லும் தாய்மார்கள் அரிக்கன் லாம்புடனும் மண்ணெண்ணெயுடனும் செல்லவேண்டியுள்ளது. (இ - 144)

## பகுதிநேர டிப்ளோமா பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பகுதிநேரப்பரீட்சை- 1989 பகுதி II இல் சித்தி அடைந்தோரின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவை வருமாறு:-

எம். பாலசுப்பிரமணியம், செல்வி பி. துரைசாமி, திருமதி எச். பிரான்ஸிஸ், எம். ஏ. சி. எம். வுவார்ட், எம். ஞானலிங்கம், திருமதி ஜே. ஜவ்பார், திருமதி பி. ஜெயராசா, பி. கமலநாதன், செல்வி எஸ். கந்தையா, செல்வி வி. கந்தையா,

ரி. காங்கேசபிள்ளை, என். கிருஷ்ணராஜா, எஸ். குபேரநாதன், திருமதி ஆர். மகாதேவா, வீ. மாணிக்கம், வி. எஸ். மாதவகுமாரன், திருமதி வி. நடராஜா, திருமதி சி. நல்லநாதன், செல்வி எம். நாராயணி, ரி எல். ஓங்காரமூர்த்தி,

வி. பத்மநாதன், கே. பேரின்பநாயகம், எம். எஸ். பிற்றர்சிங்கம், செல்வி எஸ். பொன்னையா, ஆர். ரகுபதி, செல்வி எம். ராமநாதன், திருமதி எல். என். ஜோசப், திருமதி பி. ரத்தினவேலு, செல்வி எம். பி. சவரிமுத்து, செல்வி எஸ். செல்லத்துரை,

திருமதி எம். சண்முகலிங்கம், வி. எஸ். சிவசுப்பிரமணியம், கனகசுந்தரம் சிதம்பரநாதன், குமாரசாமி சிதம்பரநாதன், எஸ். சிதம்பரநாதன், திருமதி பி. சிவஞானம், என். சிவகடாட்சம், திருமதி பி. சிவபாலன், திருமதி ஆர். சோமசுந்தரம், செல்வி யோகலஷ்மி சோமசுந்தரம்.

செல்வி வை. சோமசுந்தரம், திருமதி ஆர். சோதிலிங்கம், ஏ. ஸ்ரீக்குமாரன், ஏ. ஸ்ரீகந்தமூர்த்தி, திருமதி கே. ஸ்ரீகரன், ரி. சுப்பிரமணியம், ஆர். தவபாலன், எம். ஏ. தவரட்ணராஜா, எஸ். தேவராஜா, திருமதி ஜே. தியாகலிங்கம்.

எஸ். தில்லைநாதன் கே. வேலாயுதன், திருமதி வி. விஜேகுமார், திருமதி ரி. விஸ்வநாதன், திருமதி ஆர். குட்டித்தம்பி, வி. ஸ்ரீஸ்கந்தராஜா. (இ-6)

## மாணவர் சுற்றுலா

யாழ் பல்கலைக்கழகப் புவியியல் துறை மாணவர்கள் யாழ்ப்பாணக் கடலேரியில் மீன்பிடி, குடியிருப்பு சம்பந்தமாக நேரடி அறிவு பெறுவதற்கான கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

நான்கு விரிவுரையாளர்கள் சகிதம் அவர்கள் குருநகருக்கும் வந்தனர்.

குருநகர் சனசமூக நிலையத்தில் தலைவர் திரு. அ. யேசுதாஸன், கிராமிய கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த திரு இறேனியஸ் ஆகியோர் அவர்களுக்கு பல விளக்கங்களை அளித்தனர்.

நாவாந்துறை, பாஷையூர் போன்ற இடங்களுக்கும் மேற்படி மாணவர்கள் சென்றிருந்தனர். (அ 51)

## 3ஆம் கட்ட நிவாரணம்

தென்மராட்சி, ஜன. 11

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் விசேட நிவாரணத்திற்குரிய மூன்றாம் கட்டப் பொருள்கள் 12 ஆம் திகதி வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுவன் பலி

விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் கிணற்றில் விழுந்து மரணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் ஆனைக்குளம் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அம்பாப்பிள்ளை துஷ்யந்தகுமார் (7 வயது) என்னும் சிறுவனே இறந்தவர் ஆவார்.

சிறுவனைத் திடீரெனக் காணாத பெற்றோர் கிணற்றை எட்டிப்பார்த்தனர். கிணற்று நீரின்மேல் சிறுவனின் செருப்புகள் மிதப்பது தெரிந்தது.

பின்னர் கிணற்றில் தேடிப் பார்த்தபோது சிறுவனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. [இ-15]

# யுத்த நிறுத்தம் என்ற மாயையில் தமிழீழ மக்கள் மூழ்கக் கூடாது

### நினைவுத் தூபி திறப்பு விழாவில் செங்கதிர்

போரை விரும்பி நடத்துபவர்கள் புலிகள் தான் என்று ஸ்ரீலங்கா அரசாங்கம் சர்வதேச ரீதியில் பிரசாரம் மேற்கொண்டு வந்தது. அந்தப் பிரசாரத்தை முறியடிப்பதும், போரினால் மட்டுமல்ல பேச்சினாலும் புலிகள் பிரச்சினைகளைத் தீர்க்க ஆயத்தமாக உள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுவதுமே யுத்த நிறுத்தத்தின் அடிப்படை நோக்கம்.

ஆகவே, தமிழீழ மக்கள் யுத்த நிறுத்தம் என்னும் மாயையில் மூழ்கி விடாது தம்மைப் பலப்படுத்திக் கொள்ளவும், பொருளாதார முற்றுகையை உடைத்து, உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ளவும் விரைந்து செயற்பட வேண்டும்.

கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் வீதியில் நடைபெற்ற வீரவேங்கை ந. கிருபாகரனின் (சிறி - கண்ணாடி) நினைவுத்தூபி திறப்பு விழாவிலும், 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்திலும் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதி அமைப்பாளர் திரு. செங்கதிர் இவ்வாறு கூறினார்.

ஞாயிறு மாலை இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

திரு. செங்கதிர் மேலும் பேசுகையில்,

ஸ்ரீலங்கா அரசு விதித்த பொருளாதார நெருக்கடியை எமது மக்கள் உடைக்கவில்லை. ஆகவே பொருளாதாரத் தடையிலிருந்து விடுபட முழுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் முதலில் வலிகாமம் மேற்கு அரசியல் பொறுப்பாளர் திரு. சங்கீதன் தமிழீழ தேசியக்கொடியை ஏற்றினார்.

தூபியை நல்லூர்ப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. இ. மோகன் திறந்து வைத்தார்.

உருவப் படங்களை சிறி - கண்ணாடி, அஜந்தா, அலன் ஆகியோரின் பெற்றோர்கள் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து நினைவஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. இதில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் உட்பட இருசெந்தேவன் இருவர் [illegible] உரையாற்றினர். இறு [illegible] நடைபெற்றன. [இ-6]

## மன்னாரில் 1,000 படையினரும் 300 ஊர்காவலர்களுமாம்

கொழும்பு, ஜன 11

மன்னாரில் ஆயிரம் ஆயுதப்படையினரும் முந்நூறு ஊர்காவல் படையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அகில இலங்கை சோனகர் சங்கம் நடத்திய கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இந்தக் தகவலை வெளியிட்டார்.

மன்னாரில் பாதுகாப்பு நிலைமை சீரடைந்துள்ளதாகவும்-

முஸ்லிம் தலைவர்கள் நேரில் மன்னாருக்குச் சென்று நிலைவரத்தைப் பார்வையிடலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

முஸ்லிம்களில் ஆண்கள் முதலில் மன்னார் சென்று வீடுகளைத் திருத்திய பின்னர் பெண்கள் மற்றும் குழந்தைகளை அழைத்துச் செல்லலாம் என்றும் தெரிவித்தார். [இ-எ]

## மட்டக்களப்பு ஆசிரியர்களுக்கு முற்பணம்

கொழும்பு, ஜன. 11

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு 2 வருட சம்பள முற்பணம், 6 மாத சம்பள முற்பணம் ஆகிய வற்றைக் கடனாக வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ - எ)

## சகஜ நிலை திரும்பியதும் ஜனசக்தி உதவியாம்

சகஜ நிலைமை திரும்பியதும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஜனசக்தி உதவிகள் வழங்கும்பணி ஆரம்பமாகும்.

உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாரச்சி இத்தகவலை வெளியிட்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் சேருவில, மூதூர் பகுதிகளில் ஜனசக்தி உதவிகள் இம்மாதம் முதல் வழங்கப்படுவதாகவும் அமைச்சர் அறிவித்தார். [இ-எ]

## திருமலைத் தமிழர் மத்தியில் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு

வடக்கு — கிழக்கில் யுத்த நிறுத்த அறிவிப்பு திருகோணமலைப்பகுதி தமிழ் மக்கள் மத்தியில் சிறிது நிம்மதியை அளித்திருக்கிறது என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அகதி முகாம்களில்வாழ்ந்து வந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு — வீடுகளுக்கு சென்று வாழும் சூழ்நிலை உருவாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காணாமல்போன தங்கள் உறவினர்களை இனிமேலாவது காணமுடியும் என பலர் நம்பிக்கை தெரிவித்துள்ளனராம்.

இதேவேளை — திருமலை நகரிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடிகளில் தொடர்ந்தும் வழமைபோல சோதனைகள் நடைபெற்று வருகின்றன (இ-5)

## மட்டக்களப்பில் வெள்ள சேதங்கள் குறித்து மதிப்பீடு

கொழும்பு, ஜன. 11

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் மற்றும் பயிரழிவுகள் பற்றிய மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் பிரதேச உதவி அரசாங்க அதிபர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இம் மதிப்பீடுகள் இம்மாத முடிவினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று சமூக சேவைகள் திணைக்களம் கோரியுள்ளது. (இ-எ)

# வளைகுடா செய்திகள்

## ஆஸி தூதுவர் திருப்பி அழைப்பு

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இருந்து ஆஸ்திரேலிய தூதர் மற்றும் இராஜ தந்திரிகளையும் ஆஸ்திரேலிய பிரதமர் பொப் ஹோக் திருப்பி அழைத்திருக்கிறார்.

வளைகுடாவில் போர் ஏற்படும் ஆபத்து அதிகரித்திருப்பதால் இந்த உத்தரவை தாம் பிறப்பித்திருப்பதாக பிரதமர் ஹோக் அறிவித்தார். (இ-எ)

## ஓர் அங்குல முன்னேற்றமும் ஏற்படவில்லையாம்

வாஷிங்டன், ஜன. 11

வளைகுடா நெருக்கடியில் சமாதானத்தீர்வு காணும் முயற்சி ஓர் அங்குலம் கூட முன்னேறவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் செய்தியாளரிடம் முன்கண்டவாறு சொன்னார்.

ஜெனிவாப் பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்த பின்னர் திரு. புஷ் இக் கருத்தை வெளியிட்டார்.

இதே வேளை— இராணுவ நடவடிக்கை மூலம் குவைத்தில் இருந்து ஈராக் படைகளை வெளியேறும் தமது முடிவுக்கு பூரண ஆதரவு தெரிவிக்கும்படி ஜனாதிபதி புஷ், அமெரிக்க நாடாளுமன்றத் தலைவர்களைக் கோரியுள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றம் சனிக்கிழமை கூடி இது பற்றி முடிவு செய்ய உள்ளது. [இ-எ]

## குயிலர் பாக்தாத் விரைவார் சமரசத்துக்கு கடைசி முயற்சி

ஐ. நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் ஈராக் தலைநகர் பாக்தாத்துக்கு அவசரபயணம் ஒன்றை மேற்கொள்ளப் போவதாக அறிவித்திருக்கிறார்.

நாளை சனிக்கிழமை பாக்தாத்தில் ஜனாதிபதி சதாம் ஹுசேனை திரு. குயிலர் சந்தித்து, போரைத் தவிர்ப்பது பற்றி இறுதிப் பேச்சுக்களை நடத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் ஒன்றைத் தடுப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்கும் தார்மீக உரிமை தமக்கு இருப்பதாக ஐ. நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் சொன்னார். (இ-எ)

## எல்லையைஜோர்தான்முடியது

ஈராக் மற்றும் குவைத்துடனான எல்லைப் புறங்களை ஜோர்தான் நேற்று மூடிவிட்டது.

ஜோர்தானில் பிரஜைகள் அல்லாத ஏனைய வெளிநாட்டவர்கள் குவைத் மற்றும் ஈராக்கில் இருந்து தப்பியோடுவதைத் தடுக்கும் நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதே சமயம் குவைத் நாட்டில் இன்னும் சுமார் 6 ஆயிரம் இலங்கையர் தங்கி உள்ளனர் என்றும் - இவர்களில் பெரும்பாலோர் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரிலேயே தங்கி இருப்பதாகவும் கொழும்பில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## போர் மூளுமானால் முதலாவது தாக்குதல் இஸ்ரவேல் மீது

ஜெனிவா, ஜன 11

வளைகுடாவில் போர் ஏற்படுமானால், இஸ்ரவேல் மீது ஈராக் படைகள் முதலில் தாக்குதல் நடத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸ் ஜெனிவாவில் இதனை அறிவித்தார்.

அமெரிக்க அமைச்சர் பேக்கருடனான பேச்சுக்களின் முடிவில் ஈராக் அமைச்சர் தாரிக் அஸீஸ் செய்தியாளர் மாநாடு ஒன்றை தனியாக நடத்தினார்.

அப்போது செய்தியாளர் ஒருவர் போர் ஏற்படுமானால் இஸ்ரவேலை ஈராக் தாக்குமா? என்று கேட்டார்.

''ஆம், நிச்சயமாக இஸ்ரவேலை முதலில் தாக்குவோம்'' என்று அமைச்சர் அஸீஸ் பதிலளித்தார். (இ-எ)

## "அமெரிக்கப் படையினர் தம் இரத்தத்தில் நீச்சலடிப்பர்"

போர் ஏற்படுமானால் வளைகுடாவில் உள்ள அமெரிக்கப் படையினர் தங்கள் சொந்த இரத்தத்திலேயே நீச்சலடிப்பர்.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்ததாக பாக்தாத் டெலிவிஷன் அறிவித்தது.

ஜெனிவாப் பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்ததன் பின்னர் இது அறிவிக்கப்பட்டது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் குழுக்களிடம் உள்ள ஆயுதங்களைப் பெற உத்தரவு

கொழும்பு, ஜன 11

அரசியல் கட்சிகளுக்கும் ஏனைய குழுக்களுக்கும் வழங்கப்பட்டுள்ள சகல ஆயுதங்களையும் சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பதாக திரும்பப் பெற்றுக்கொள்ளும் படி பொலீஸ் மா அதிபருக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

அரசியல் கட்சிகளுக்கும் ஏனைய குழுக்களுக்கும் பாதுகாப்பு அமைச்சு 6 ஆயிரத்து 143 ஆயுதங்களை வழங்கியிருந்தது.

இவற்றில் 2 ஆயிரத்து 150 ஆயுதங்களே இதுவரை திருப்பி ஒப்படைக்கப்பட்டன. இன்னும் சுமார் 4 ஆயிரம் ஆயுதங்கள் திருப்பி ஒப்படைக்கப்படாமல் உள்ளன.

இவற்றையே திரும்பப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கும்படி பொலீஸ் மா அதிபர் பணிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாயுதங்கள் வெளியார் கைகளில் இருப்பதால் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது சிரமமான காரியமாக இருப்பதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

# உயர் நீதிமன்ற நீதியரசராக நியமனம்

கொழும்பு, ஜன. 11

சொலிசிட்டர் ஜெனரலான திரு. எஸ். டபிள்யு வகு கொடப்பிட்டியா உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஜனாதிபதி பிரேமதாஸா முன்னிலையில் நேற்று இவர் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இஸ்ரவேல் தொடர்புபற்றி விசாரணை செய்யும் ஆணையாளராகவும் இவர் தற்போது பணிபுரிந்து வருகிறார். (ஒ-எ)

# கட்சித் தலைவர்கள் கூட்டத்தை 5 எதிர்க்கட்சிகள் பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஜன. 11

தாக்குதல் நிறுத்தத்தைநீடிப்பதா என்பது குறித்து ஜனாதிபதி பிரேமதாசா நேற்று மாலை கூட்டிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் சுதந்திரக் கட்சி உட்பட ஐந்து கட்சிகள் கலந்து கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பு சம்பந்தமாக அரசு எடுக்கும் எந்த முடிவும் சில நிபந்தனைகளை விதிப்பதாக இருக்க வேண்டும்என்று அரசுக்குஅறிவிக்கப்பட்டிருப்பதாக இந்த ஐந்து கட்சிகளின் சார்பில் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

சண்டை நிறுத்தத்தைத் தொடர்ந்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடங்க வேண்டும் என்றும் இக்கட்சிகள் அரசை வலியுறுத்திக் கேட்டு உள்ளன.

போர்க் களமாக உள்ள வடக்கு - கிழக்குப் பகுதியில் சட்டப்படி அதிகாரம் பெற்றவர்கள் தவிர வேறு யாரும் ஆயுதங்களை எடுத்துச் செல்வதையோ, உபயோகிப்பதையோ அனுமதிக்கக் கூடாது என்பதும் இந்தக் கட்சிகள் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்றாகும்.

இரு தரப்பினரும் வருங்காலத்தில் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான ஆயத்தங்களுக்கு சண்டை நிறுத்தத்தைப் பயன்படுத்தாமல், உண்மையான அரசியல் தீர்வு காணும் முயற்சிக்குப் பயன்படுத்தினால் மட்டுமே இந்த ஐந்து கட்சிகளும் அதனை ஆதரிக்கும்.

- இவ்வாறு தாங்கள் அரசுக்கு தெரியப்படுத்தி உள்ளதாக ஐந்து கட்சிகள் அமைப்பின் பேச்சாளரான டாக்டர் ராஜிதா சேனரத்தினா சொன்னார். [உ-எ]

# பல்கலைக் கழகத்துக்கு 3 லட்சம் ரூபா மட்டுமே

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். பல்கலைக் கழகத்துக்கு இம்முறை கப்பலில் வந்த பணத்தில் 3 லட்சம் ரூபா மட்டுமே கிடைத்துள்ளது.

இதனால் பல்கலைக் கழகத்தின் அத்தியாவசிய தேவைகளை ஒழுகாகச் செய்யவோ மாணவருக்குரிய மகாபொல உதவிக் கொடுப்பனவுகளை முழுவதும் பணமாக வழங்கவோ முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பிக்கும் அபாயம்கூட ஏற்படலாம் என்று பல்கலைக் கழக வட்டாரங்களில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

இம்முறை கப்பலில் வரும் பணத்தில் பல்கலைக் கழகத்துக்கு 10 லட்சம் தருவதாக உறுதி அளிக்கப்பட்டிருந்ததாகவும் அதே வட்டாரங்கள் தகவல் தந்தன. [அ-6]

# நல்லூரில் நிவாரணம் நாளையே

யாழ்ப்பாணம், ஜன. 11

3 ஆம் கட்ட விசேட உலர் உணவு நிவாரண விநியோகம் நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் கீழ் உள்ள 23 கிளைகளிலும் நாளை சனிக்கிழமையே ஆரம்பமாகும்.

நல்லூர் ப. நோ. கூ. சங்க பிரதான முகாமையாளர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது உணவு முத்திரைக்கான விநியோகம் நடைபெற்று வருவதாலேயே இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-9]

# உணவு முத்திரைக்கு நெல்லும், உழுந்தும்!

யாழ்ப்பாணம், ஜன. 11

நெல்லும், உழுந்தும் உணவு முத்திரைக்கு வழங்கப்படுகின்றன.

இது வேறு எங்குமல்ல. நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் உள்ள கிளைகளில் தான்.

அரிசிக்கு நிலவி வரும் தட்டுப்பாட்டினாலும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் போதியளவு உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லாததுமே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-6]

# அரசியல்வாதிகளுக்கு பொலீஸ் பாதுகாப்பு 50 வீதம் குறைப்பு

கொழும்பு, ஜன,11

வடக்கு - கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள அரசியல் வாதிகளுக்கு பாதுகாப்பளிக்க ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலீஸாரின் எண்ணிக்கையை 50 சதவீதம் உடனடியாகக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது

இந்த அரசியல்வாதிகளில் அமைச்சர்கள், எம். பிக்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் அடங்குகின்றனர். பிரதம இன்ஸ்பெக்டர். சப் இன்ஸ்பெக்டர் ஆகிய தரங்களைச் சேர்ந்த 89 அதிகாரிகளும், 76 சார்ஜன்ட்களும், 1842 கான்ஸ்டபிள்களும் அரசியல் வாதிகளுக்கு பாதுகாப்பளிக்கும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அமைதி நிலவுவதே, இந்த நடவடிக்கைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இப்பாதுகாப்பு நடவடிக்கைக்காக 8 கோடி ரூபா செலவிடப்பட்டு வருகிறது.

இந்த 50 சத வீதக் குறைப்பினால் சுமார் 4 கோடி ரூபா சேமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ எ)

# இஸ்ரவேல் தொடர்பு; விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜன. 11

இலங்கையில் இஸ்ரவேல் தொடர்பு பற்றி பகிரங்க விசாரணைகளை ஆணையாளர் திரு. எஸ். டபிள்யு. வதுகொடப்பிட்டியா நேற்று ஆரம்பித்தார்.

1985 ஜூன் மாதத்தில் இஸ்ரவேல் சென்ற இலங்கை ஆயுதப்படையினரின் விவரங்களை ஆணையாளரிடம் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா சமர்ப்பித்தார்.

விசாரணை மீண்டும் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் போது பிரிகேடியர் விஜய விமலரத்ன ,விங் கொமாண்டர் சுவில் கபிரியல் ஆகியோர் சாட்சியம் அளிப்பர். (ஒ-எ)

# மாணவர் கூட்டம்

யாழ்பாணம், ஜன. 11

நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற இருக்கும் கலந்துரையாடலில் அனைத்துப்பாடசாலைகளில் இருந்தும் தலா மூன்று மாணவர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது,

தென் தமிழீழ மாணவர்களின் கல்வி, இதர நிலைமைகள் குறித்து கலந்துரையாடவே இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. [ஒ]

# விஞ்ஞானிகள் ஒன்றியம்

யாழ்ப்பாணம், ஜன. 11

தமிழ்ப் பகுதிகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளை ஒன்றிணைத்து விஞ்ஞானிகள் ஒன்றியம் ஒன்றை அமைப்பது சம்பந்தமான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

தற்போது இலங்கையில் -கொழும்பில் மட்டும்தான் இத்தகைய ஓர் அமைப்பு இயங்குகிறது.

இவ்வாறு விஞ்ஞானிகள் ஒன்றியம் ஒன்று அமைக்கப்படும்பட்சத்தில், எமது உள்ளூர் பொருளாதாரம், நிதி, வேலை வாய்ப்பு மற்றும் பல தரப்பட்ட அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

இதற்கு கொழும்பில் தங்கியிருக்கத் தேவையில்லை. -என்று விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தெரிவித்தார். [அ-6]

# திட்டமிடல் ஊழியருக்கு நிரந்தர நியமனம்!

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். செயலகத்தில திட்டமிடல் பகுதியில் பணிபுரிந்த ஏழு ஊழியர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாண சபை நிரந்தர நியமனங்களை வழங்கியுள்ளது.

இதன்படி இந்தப் பிரிவில் பணிபுரிந்த எழுதுவினைஞர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், சாரதி, தட்டெழுத்தாளர்கள், சிற்றூழியர்கள் ஆகியோர் கடந்த ஆண்டு (1990) மார்ச் மாதம் முதல் நிரந்தர நியமனம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இவர்கள் இப்பிரிவில் அமைய அடிப்படையில் பணியாற்றி வந்தது குறிப்பிடத்தக்கது. [அ-100]

# தமிழ் மக்களின் போராட்டத்தை ராணுவத்தால் அடக்க முடிந்ததா?

## ஐ. தே. க. பிரமுகர் கணேசலிங்கம் கேள்வி

கொழும்பு, ஜன. 11

வடக்கு - கிழக்கில் கடந்த 17 வருடங்களாக நடந்து வரும் போராட்டத்தை இலங்கை இராணுவத்தினாலோ அல்லது உலகின் நான்காவது பெரிய இராணுவத்தினாலோ முறியடிக்க முடிந்ததா?

ஐக்கிய தேசியக் கட்சிப் பொருளாளரும், யாழ் மாவட்ட அமைப்பாளருமான திரு கே. கணேசலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒரு தலைப்பட்ச போர் நிறுத்தம் பற்றி அவர் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் அப்பேட்டியில் சொன்னதாவது:

யுத்த நிறுத்தமானது, அதனை தொடர்ந்து வரப் போகும் சமாதானத்தை அறிவிக்கவென விண்ணில் தோன்றிய நட்சத்திரமாகும்.

இச் சந்தர்ப்பத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து ஈழம் கோரிக்கைக்கு ஈடான மாற்றுத்திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டியது அவசியமாகும்.

எனது மாற்றுத் திட்ட யோசனையைக் கட்சியின் தலைமைப் பீடத்திலும் வலியுறுத்தப் போகிறேன்.

### புலிகளின் கோரிக்கை

யுத்தத்தினால் சமாதானத்தை ஏற்படுத்த முடிந்ததா?

விடுதலைப் புலிகள் தமிழீழ கோரிக்கைக்காக போராடுகின்றனர். இதேவேளை - நீதியான, சமாதானத் தீர்வை சுயநிர்ணய உரிமையுடனான தீர்வை ஏற்றுக் கொள்ளத் தயார் என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்து உள்ளனர்.

இந்த நிலையில் ஆளும் கட்சியும் அனைத்துக் கட்சிகளும் இணைந்து ஈழக் கோரிக்கைக்கு மாற்று அரசியல் திட்டத்தை முன்வைக்க வேண்டியது அவசியமாகும்.

இந்தத் தேசிய முக்கிய பணியில் இருந்து விலகி நின்று கொண்டு சமாதானத்துக்கான அவசியத்தை விமர்சிப்பதில் அவசியமில்லை.

—இப்படி திரு கணேச லிங்கம் சொன்னார். (ஒ-எ)

# ஐரோப்பிய மந்திரிமாரை சந்திக்க தாரீக் மறுப்பு

ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக் அஸீஸ் ஐரோப்பிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களைச் சந்திக்க மறுத்து விட்டார்.

ஜெனிவாப் பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து, ஈராக் அமைச்சரை அங்கு சந்தித்துப் பேச ஐரோப்பிய வெளிநாட்டமைச்சர்கள் முயற்சித்தனர். (ஒ-எ)

# மேற்கு ராஜதந்திரிகள் வெளியேற ஆரம்பம்

வண்டன், ஜன. 11

ஈராக் தலைநகர் பக்தாத்தில் இருந்து மேற்கு நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திரிகள் வெளியேற ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டன் தனது ராஜதந்திரிகளை உடனடியாக ஜோர்தான் தலைநகர் அம்மானுக்குச் செல்லும்படி உத்தரவிட்டுள்ளது.

ஈராக் மீது இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு ஐ. நா. விதித்த காலக்கெடு ஜனவரி 15 நள்ளிரவுடன் முடிவடைகிறது.

அதற்கு முன்னர் பக்தாத்தில் இருந்து சகல நாடுகளின் ராஜதந்திரிகளும் வெளியேறிவிடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [ஒ-எ]

# கருத்தரங்கு

கைதடி, ஜன. 11

தென்மராட்சியிலுள்ள இணக்கமன்றுப் பொறுப்பாளர்களுக்கும் இணக்கமன்று உறுப்பினர்களுக்குமான விசேட கருத்தரங்கு ஒன்று நாளை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை சிவபாதம்

ஏழாலை மேற்கைச் சேர்ந்த திரு. செல்லத்துரை சிவபாதம் [''தாசன் சவுண்'' ஒலிபெருக்கியின் உரிமையாளர்] காலமானார்.

இவர் பூமணியின் அன்புக் கணவரும், கெங்காதரன் [சவூதி], கிருபாகரன், யசோதை, கோசலை [ஆசிரியை, மைலணி சைவ மகா வித்தியாலயம் சுன்னாகம்], துவாரகை, சவுந்தலை ஆகியோரின் அன்புத் தந்தையும், லீலாவதி குணபாலசிங்கம், காலம் சென்ற கமலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், செ. ஜெயலச்சுமியின் [F.M.S. பென்சனியர்] அன்பு மகனும், பொன் சபாதி [கிளிநொச்சி கல்வி அதிகாரி], காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், க. இராஜேஸ்வரன், அ. குணபாலசிங்கம், ச. நாவேந்தன், ச. வேல்மாறன், க. சீதா, க. பிரபாகரன் க. இரகுநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [11-1-91] வெள்ளிக்கிழமை மாலை 2 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஏழாலை மேற்கு. (15215) கிருபாகரன்

## திரு. ஆசைப்பிள்ளை சந்திரநாதன்

யாழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை உதவி வேலைப் பரிசோதகரும், அரியாலை மேற்கைச் சேர்ந்தவரும் ஆகிய திரு ஆசைப்பிள்ளை சந்திரநாதன் 09 - 01 - 1991 அன்று கொழும்பில் காலமானார். அவர் திரு திருமதி க. ஆசைப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும் திரு. ஆ. ஜெகநாதன் [தொ. நு. உ. பனை அபிவிருத்தி சபை யாழ்ப்பாணம்] ஆ. ஜீவநாதன், [பொது சுகாதார உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை], ஆ. இரகுநாதன் [கணக்காளர் உள்ளூராட்சித் திணைக்களம், வ. கி. மாகாண சபை திருகோணமலை], ஆ. நேசநாதன் [தொ. நு. உ. வீடமைப்பு நீர்ப்பாசன அமைச்சு வ. கி. மா. சபை திருகோணமலை], திருமதி ஜேம்ஸ் அருள்நேசன், மஞ்சுளா ஆகியோரின் அன்பு சகோதரரும் திரு. ஜே. அ. ஜீவானந்தம் [ஹற்றன் நாஷனல் வங்கி, கொழும்பு], திருமதி விமலா குணமலர் ஜெகநாதன், திருமதி நடேஸ்வரி ஜீவநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜீ. நிரோஜன், ஜீ. சோபிங்கா ஆகியோரின் சித்தப்பாவும், அ. சாமுவேல் தேவகுமாரனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10 - 01 - 1991 அன்று கொழும்பில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
ஆ. ஜெகநாதன்
50/3 கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு யாழ்ப்பாணம். [15214]

# கலைஞருக்கு எச்சரிக்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திற்கும் நமது நாடெங்கிலும் உள்ள தீவிரவாதிகள் காலூன்றுவதற்கும் ஓர் இடமாக தமிழகம் மாறிவிட்டது.

ஏ. கே. 47 ரக துப்பாக்கிகள் தமிழ்நாட்டில் மிக மலிவான விலைக்கு கிடைக்கின்றன. அவற்றை அஸாம் தீவிரவாதிகள் மட்டுமல்ல ஆந்திர நக்ஸலைட்டுக்களும் பஞ்சாப் தீவிரவாதிகளும் பயன்படுத்தி வருகின்றனர்.

### யாழ்ப்பாணத்துக்கு தகவல்கள்

விடுதலைப் புலிகள் சம்பந்தமாக தமிழக அரசுக்குத் தெரிவிக்கப்படும் தகவல் கூட, யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமையகத்துக்குப் போய்விடுகிறது.

விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை வைத்து நான் தமிழக அரசை மிரட்டவில்லை,

அதே சமயம் மத்திய அரசு முன்னரைப் போல் சென்னையில் இருந்து நடத்தப்படவில்லை; நாடாளுமன்றத்தில் இருந்தே நடத்தபடுகின்றது என்பதை திரு. கருணாநிதி மனதில் கொள்ளவேண்டும்.

தமிழகத்தில் நிலைமை மிகவும் மோசமாக இருப்பது குறித்து கவலைப்படுகின்றேன்.

முன்பு நான் சாதாரண எம். பியாக இருக்கும்போது விடுதலைப் புலிகளின் நடவடிக்கை பற்றி அப்போதைய அரசுக்குத் தெரியப்படுத்தினேன். ஆனால் எனது கடிதத்தைப் பெற்றுக்கொண்டதாகக்கூட அரசு பதிலளிக்கவில்லை.

விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் தமிழக அரசுக்கு நம்பகமாகத் தெரிவிக்கப்பட்டாலும், அவை யாழ்ப்பாணத்திற்குப் போய்ச் சேருவதால் இப்போது தகவல்களைத் தெரிவிக்கத் தயக்கமாக இருக்கிறது. — இப்படி பிரதமர் சொன்னார்.

### ஒப்பிடக்கூடாது

விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை நாட்டின் இதர பிளவுச் சக்திகளோடுஒப்பிடக்கூடாது என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் இந்திரஜித் குப்தா குறுக்கிட்டுச் சொன்னார்.

அதற்கு பதிலளித்து சந்திரசேகர் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளுக்கும் அஸாம் தீவிரவாதிகளுக்கும் இடையே தொடர்புகள் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

தமிழ் நாட்டில் அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணியினருக்கு ஆறு நிலையங்கள் இருக்கின்றன என்பதற்கும் உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

### சகிக்க முடியாது

விடுதலைப் புலிகளின் நடவடிக்கை நமது ஒருமைப்பாட்டுக்கே அபாயகரமாக உள்ளது. இது சகித்துக்கொள்ளப் பட மாட்டாது.

தமிழக முதலமைச்சர் தற்போது விடுக்கும் அறிக்கைகள் கண்டிக்கப்பட வேண்டியவையாகும்.

நான் அவரைச் சந்தித்த போது, நடவடிக்கை எடுப்பதாக நம்பவைத்தார். ஆனால் இப்போதோ அப்படி கட்டாயப்படுத்தப்பட்டதாக முதலமைச்சர் கூறுகிறார். இது நல்லுறவுக்கு நல்லதல்ல. — இப்படி பிரதமர் சொன்னார்.

இதற்கு முன்னதாக ராஜ்ய சபையில் கேள்வி நேரத்திற்குப் பிறகு, காங்கிரஸ் மற்றும் அ. தி. மு. க, எம். பிக்கள், இந்தப் பிரச்சினைக்காக தமிழக அரசை பதவிநீக்கம்செய்ய வேண்டும் என்று கோரினார்கள்.

இதனை பாரதிய ஜனதா கட்சியும் ஆதரித்தது.

ஏனைய எதிர்க்கட்சிகள் இக் கோரிக்கையை எதிர்த்தன. இதனால் சபையில் அமளி நிலவியது. [உ-எ]

# முக்கிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்து சேர்ந்துள்ளது.

நாய்க்கொல்லி மருந்தான ''ஸ்ரிச்சினின்'' ரகத்திலும் 400 கிராம் கொண்டு வரப்பட்டுள்ளது. இம் மருந்தில் ஒரு கிராம் கொண்டு பத்து நாய்களைக் கொல்ல முடியும் என்றும்—

சுகாதாரவைத்திய அதிகாரிகள் பிரிவுகளுக்கு இது பகிர்ந்தளிக்கப்படும் என்றும் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ... தெரிவித்தனர் [அ-6]

# 'லேபல்' மாற்றுவது குற்றம்

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்த அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி உணவுப்பொருள்களில் உள்ள லேபல்களை மாற்றுவது ஒரு குற்றமாக இனிக் கருதப்படும்.

இக்குற்றத்தைப் புரிபவருக்கு மூவாயிரம் ரூபா அபராதம் அல்லது மூன்றுமாதச் சிறை விதிக்க புதிய திருத்தம் வகை செய்கிறது. (ஆ-எ)

# புலிகளின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிக அதிகமானோர் 20 வயது முதல் 28 வயது எல்லைக்கு உட்பட்டவர்கள் ஆவர். ஒருவர் 45 வயதுக்காரர். இன்னொருவர் 54 வயதுக்காரர், மூன்று பேர் 30 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டோர்.

தடுப்புக் காவலில் உள்ள பொலீஸாரில் மூவர் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள், 2 பேர் பொத்துவிலைச் சேர்ந்தவர்கள். அம்பாறையைச் சேர்ந்த ஒருவரும் அடங்குவர். ஏனையோர் இப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள். [அ-உ-74]

# 3 லட்சம் எய்ட்ஸ் நோயாளர்!

ஜெனிவா, ஜன.10

மூன்று லட்சத்துக்கு அதிகமான எய்ட்ஸ் நோயாளர்கள் இன்று உலகில் இருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்தது.

கடந்த டிசம்பர் மாதம் புதிதாக சுமார் 7 ஆயிரம் பேர் எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டனர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 202/2 இலக்க ... 11 - 1 - 1991 இல் ... [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org